PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com

# அணிந்துரை

**டாக்டர் டிஎஸ். நாராயணஸ்வாமி**
**யூனிசெப் சென்னை (UNICEF MADRAS)**

புண்ணிய பாரதத்திற்குப் புகழையும் பெருமையையும் தேடித் தந்த, ஆன்மீகப் பெரியார்களில், ராமாநுஜர், தனக்கெனத் தனித் தத்துவ பாணியையும், சிறப்பினையும் கொண்டவர். நாராயண மந்திரத்தைப் பாமரனுக்கும் உபதேசித்து, எல்லோரும் உய்ய வழி செய்த, அவரின் வைணவ தத்துவங்கள், வாழ வழிகாட்டும் வரலாற்றுச் சொற்களாகும்.

ராமாநுஜரின் தத்துவங்களை ராமாநுஜ தர்சனம் என்ற நூலாகத் தொகுத்து வழங்கியுள்ளார். திரு N.C. ஸ்ரீனிவாசன் அவர்கள் தர்மச்சுடர் எனும் சமயப் பத்திரிக்கையில் வைணவ தத்துவங்களையும், கதைகளையும் எழுதி தமிழக வாசகர்களுக்கு அறிமுகமான ஒரு எழுத்தாளர் ஆவர். வைணவ சமய நூல்கள் பற்றிய நுண்ணிய அறிவும், பல ஆண்டு ஆராய்ச்சி அனுபவமும் கொண்ட அன்னாரின் இந்நூல் வைணவ தர்மத்தை வாழ வைக்க வருங்கால சந்ததிக்கு எடுத்துக்கூற ஒரு கல்வெட்டு போல திகழும் என்பது என் நம்பிக்கை. இந்து சமய ஆராய்ச்சியாளருக்கும், சொற்பொழிவாளர்களுக்கும், சமயக் கல்வியில் ஈடுபாடு கொண்ட, எதிர்கால சந்ததியினருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

சென்னை — டாக்டர் T.S. நாராயணசாமி

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com
PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com

# முன்னுரை

அறிவுக் கருவூலமான வேதாந்தம் என்ற உயிருக்கு, வடமொழி தத்துவ ஞான விளக்கங்களும், பகவத் விஷயமான தமிழ் மறையும் இரு உடல்களாகும். உபயவேதாந்தமான இந்த இரு கூறுகளையும், நன்கு ஆராய்ந்து, ஆழ்ந்து சிந்தித்து அதன் முடிவுகளை சித்தாந்தமாக வெளிப்படுத்தியவர் ஸ்ரீ ராமாநுஜர். இவைகளை கற்பதற்காக, வித்வான், ஸாரஸாரஜ்ஞ, சிரோன்மணி, திருக்கள்ளம் ஸ்ரீ உ.வே. நரசிம்ஹ ராகவாச்சார்ய ஸ்வாமிகளிடமும், ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வான், புரிசை, நடாதூர் ஸ்ரீ உ.வே. கிருஷ்ணமாச்சார்ய ஸ்வாமிகளிடமும், அடியேன் ஸ்ரீ பாஷ்யம் காலக்ஷேபம் செய்தேன். அப்பொழுது, அவ்வாச்சார்யார்கள் வழங்கிய வெகு அற்புதமான மேற்கோள்களினையும், உதாரணங்களையும், அடியேன் குறிப்பெடுத்துக் கொள்வது வழக்கம். இவ்வகையில் இந்த பயிற்சி எனது எழுத்தார்வத்தை தூண்ட, "தர்மச்சுடர்" எனும் ஆன்மீகப் பத்திரிக்கையில், வைணவ தத்துவங்களையும், ஆழ்வார்களின் வரலாறுகளையும் எழுதுவதற்கு ஊக்குவித்தவர் எனது நண்பர் டாக்டர் ஸ்ரீ T.S. நாராயண சுவாமி அவர்கள்.

விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களை விளக்கும் தமிழ் நூல்கள் அரிதாக இருப்பதால், இத்தத்துவங்களை எளிய தமிழ்நடையில் ஒரு நூலாக வெளியிட அவாக்கொண்டு, "யதீந்தர மததீபிகா" என்ற சித்தாந்த நூலின் அடிப்படையில், ஸ்ரீராநுஜ தர்சனம் என்ற இந்த நூலை வெளியிட்டுள்ளேன்.

இதை வடிவமைத்து, சரிபார்த்து கொடுத்த அன்பரும் எனது உறவினருமான ஸ்ரீ உ.வே. ராமபத்சாச்சாரி I.A.S. அவர்களுக்கு அடியேன் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். மேலும், சித்தாந்த விஷயங்களில், பொருள் குற்றம் தோன்றாத வகையில் ஆலோசனைகள் வழங்கி உதவி புரிந்த ஆச்சார்யார் புரிசை நடாதூர் உ.வே. ஸ்ரீ கிருஷ்ணமாச்சார்ய ஸ்வாமி அவர்களுக்கும், எனது எழுத்தார்வத்தை தூண்டிய டாக்டர் ஸ்ரீ T.S. நாராயணஸ்வாமி அவர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய நிறுவனத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

சென்னை

இப்படிக்கு
நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீனிவாசன்

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நிலைத்த நல்வழி | 1 |
| 2. | வைணவம் | 5 |
| 3. | வைணவப் பண்பாடு | 13 |
| 4. | வைணவம் காட்டும் அறநெறிகள் | 19 |
| 5. | வைணவத்தின் தாரகம் திருமந்திரம் | 25 |
| 6. | திருமந்திரம் காட்டும் உறவுகள் | 31 |
| 7. | முக்தி பெறும் வழிகள் | 43 |
| 8. | அத்வைதமும் - விசிஷ்டாத்வைதமும் | 56 |
| 9. | தத்துவங்களின் அடிப்படை | 62 |
| 10. | தத்துவங்களின் விரிவு - பிரமாணம் | 65 |
| 11. | பிரத்யக்ஷ பிரமாணம் | 68 |
| 12. | அநுமானப் பிரமாணம் | 74 |
| 13. | சப்தப்பிரமாணம் | 78 |
| 14. | பிரகிருதி | 85 |
| 15. | காலம் | 97 |
| 16. | நித்யவிபூதி | 101 |
| 17. | தர்ம பூத ஞானம் | 106 |
| 18. | ஜீவன் | 113 |
| 19. | ஈசுவரன் | 126 |
| 20. | அத்திரவியங்கள் | 142 |